# கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி – COVID-19 தடுப்பூசி அஸ்ட்ராஜெனிகா (அஸ்ட்ராஜெனிகா)

## இந்தத் தடுப்பூசி பெறுவதற்கான அழைப்பைப் பெற்றவர்களுக்கான தகவல்

நாவல் கொரோனா வைரஸ் எனப்படும் தனித்துவ கொரோனா வைரஸ், சுவாசக்குழாய் தொற்றுநோயை ஏற்படுத்துகிறது. பலருக்கும் மிதமான அறிகுறிகள் ஏற்படலாம் அல்லது அறிகுறிகள் ஏதும் ஏற்படாமலும் இருக்கலாம். ஆனால், சிலர் தீவிரமாக பாதிக்கப்படக் கூடும். குறிப்பாக ஏற்கனவே சில நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள முதியவர்கள், தீவிரமாக பாதிக்கப்பட்டு, சில நேரங்களில் மரணமும் ஏற்படும் அபாயத்தில் உள்ளனர். உயிரையும், உடல் நலனையும் பாதுகாப்பதே கொரோனா வைரஸ் தடுப்பூசியின் முக்கிய நோக்கம் ஆகும்.

## கொரோனா வைரஸ் தடுப்பூசி யாரெல்லாம் போட்டு கொள்ள வேண்டும்?

தேசிய தடுப்பூசி திட்டத்தின் மூலம் இந்தத் தடுப்பூசியை வழங்க பரிந்துரைக்கப்படும் நபர்களுக்கு, முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் அவர்களின் முறை வரும்போது வழங்கப்படும்.

இந்தத் தடுப்பூசி முற்றிலும் இலவசம் மற்றும் போட்டு கொள்வது அவர்களின் சொந்த விருப்பத்திற்கு உரியது. நார்வேயில் வசிக்கும் மக்களுக்குத் தடுப்பூசி வழங்கப்படும்.

## தடுப்பூசியைப் பெறுவது எப்படி?

முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி யாருக்கு வழங்கப்படகிறது, தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள், அந்நிகழ்ச்சி எப்போது, எங்கே நடைபெறவுள்ளது போன்ற தகவல்களை உங்கள் நகராட்சியின் இணையத்தளத்தில் காணலாம்.

## தடுப்பூசி எவ்வாறு செலுத்தப்படுகிறது?

தடுப்பூசி மேற்புற கையில் செலுத்தப்படும். 9-12 வார இடைவெளியில் இரண்டு டோஸ்கள் தடுப்பூசியைப் பெறுவீர்கள். இதில், நீங்கள் திட்டமிடப்பட்ட நேர இடைவெளியில் இரண்டாவது டோஸ் தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது மிகவும் முக்கியம். தடுப்பூசியைப் பெறுவதற்கு முன்பு, உங்களுடைய உடல் நலன் குறித்தும், நீங்கள் முன்னதாக ஏதேனும் தடுப்பூசி எடுத்து கொண்டபோது ஏற்பட்ட எதிர்வினைகள் ஏதுமிருந்தால் அது குறித்தும் கேள்விகள் கேட்கப்படும். உங்களுக்கு ஏதேனும் ஒவ்வாமை இருந்தால், கர்ப்பமாக இருந்தால், வேறு ஏதேனும் மருந்துகள் எடுத்துக் கொண்டிருந்தால் அல்லது ஏதேனும் பிற உடன் நலன் சார்ந்த பிரச்னைகள் இருந்தால் தவறாமல் தெரிவிக்கவேண்டும். பொதுவாக, ஏதேனும் திடீர் சுகவீனம் மற்றும் 38 ° C க்கு மேல் காய்ச்சல் இருந்தால் தடுப்பூசி போடப்படுவது தள்ளி வைக்கப்படலாம். நீங்கள் தடுப்பூசி போட்ட பிறகு, 20 நிமிடங்கள் வரை காத்திருக்குமாறு கேட்கப்படுவீர்கள்.

## தடுப்பூசி எவ்வாறு செயல்படும்?

தடுப்பூசி ஒரு அபாயமற்ற வைரஸ் (சாதாரண சளி உண்டாக்கும் வைரஸ்) ஒன்றைப் பயன்படுத்தி, கொரோனாவின் ஸ்பைக் புரோட்டீன் உருவாக்குவதற்குத்

தேவைப்படுபவற்றை நமது உடலுக்குள் செலுத்துகிறது. நமது உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம் அடையாளம் கண்டு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதற்கு தேவையான அளவுக்கு ஸ்பைக் புரோட்டீன் நகல்கள் நமது உடலில் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறாக, நமது நோய் எதிர்ப்பு மண்டலம் கொரோனா வைரஸின் ஸ்பைக் புரோட்டீன்களை அடையாளம் காண கற்று கொண்டு, வைரஸிடமிருந்து நம்மைப் பாதுகாக்க முடியும்.

கொரோனா பொருட்களை உடலுக்குள் கடத்தும் இந்தக் கடத்தி வைரஸ், மனித உடலுக்குள் வளராது மற்றும் விரைவில் அழிக்கப்பட்டு விடும். இந்தத் தடுப்பூசியினால் கொரோனா வைரஸ் தொற்று அல்லது வேறு எந்த தொற்று நோயையும் ஏற்படுத்த முடியாது. ஆனால், இத்தடுப்பூசியினால், கொரோனா தொற்று ஏற்படாமல் தடுக்க முடியும். அதே, சமயம் ஏற்கனவே உண்டான தொற்றையோ, நோயையோ இந்தத் தடுப்பூசி குணப்படுத்தாது.

ஏற்கனவே, எபோலா வைரஸ் தடுப்பூசிகள் உருவாக்க பயன்படுத்தப்பட்ட அதே முறையைப் பயன்படுத்தி இந்தத் தடுப்பூசி உருவக்கப்பட்டுள்ளது.

## இந்தத் தடுப்பூசி எவ்வளவு திறன்மிக்கதாக வேலை செய்யும்?

தடுப்பூசியானது, புதிய தனித்துவ கொரோனா வைரஸால் ஏற்படும் நோய்தொற்றில் இருந்து பாதுகாக்கிறது. ஆய்வுகளின்போது தடுப்பூசி வழங்கப்பட்டவர்களில் இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பிறகு, சராசரியாக 60% பேர் COVID-19 நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், இரண்டு டோஸ்களுக்கு இடையிலான இடைவெளி 9 வாரங்கள் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருந்தால் பாதுகாப்பின் அளவு அதிகமாக இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய அளவுக்குக் கடுமையான COVID-19 நோய்க்கும் இந்தத் தடுப்பூசி பாதுகாப்பை வழங்குகிறது என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஆனால், பாதுகாப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. காலப்போக்கில் பாதுகாப்பு குறைவதாக அறியப்பட்டால் கூடுதல் டோஸ் தேவைப்படலாம். தடுப்பூசி நோயைத் தடுப்பதால், இது பரவுவதையும் தடுக்கும், ஆனால் அதன் சாத்தியமான அளவு பற்றி இன்னும் எங்களுக்குத் தெரியவில்லை. எனவே, தற்போதைய நோய் தொற்று கட்டுப்பாட்டு ஆலோசனைகளைத் தொடர்ந்து பின்பற்றுவது முக்கியம்.

### பக்க விளைவுகள்

இதுவரை நடத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்து, தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு ஏற்படும் பொதுவான மற்றும் அரிதான பக்க விளைவுகளைப் பற்றிய போதிய அறிவு எமக்குக் கிடைக்கப்பட்டுள்ளது. ஆயினும் தடுப்பூசியிடப்பட்டு நீண்ட காலத்தின்பின் அரிதான அல்லது சாதாரண பக்க விளைவுகள் தோன்றாது என்பதை எம்மால் அறிதியிட்டுக் கூறமுடியாது. பெரும்பாலான பக்க விளைவுகள் தடுப்பூசிக்குப் பிறகு முதல் சில நாட்களில் ஏற்பட்டு, அடுத்த சில நாட்களில் சரியாகிவிட்டன.

- தடுப்பூசி போட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களுக்கு ஊசி போடப்பட்ட இடத்தில் வலி உண்டாகியுள்ளது.
- உடல் நலன் பாதிக்கப்பட்டதாக உணர்தல், சோர்வு, தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, குளிர், குமட்டல் மற்றும் காய்ச்சல் போன்றவை பிற வழக்கமான பக்க விளைவுகள் ஆகும்.
- பக்க விளைவுகள் மற்றும் 2ஆம் டோஸுக்குப் பிறகு அரிதாகவே தோன்றுகின்றன.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஏற்படும் பக்க விளைவுகள் லேசானவை அல்லது மிதமானவை. 5%க்கும் குறைவானவர்களுக்கு அபாயமற்ற, ஆனால் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் வகையில் உபாதைகள் சில நாட்கள் இருந்தன.

## எனக்கு பக்க விளைவுகள் உண்டானால், நான் என்ன செய்ய வேண்டும்?

தடுப்பூசி காரணமாக உண்டாகலாம் என எண்ணும்படியான எதிர்பாராத, தீவிரமான அல்லது நீடித்த அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால், அதைப் பற்றிய பரிசோதனை மற்றும் ஆலோசனைக்கு உங்கள் மருத்துவர் அல்லது யாரேனும் சுகாதாரப் பணியாளரைத் தொடர்பு கொள்ளுங்கள். தடுப்பூசி காரணமாக ஏற்படும் எந்தவொரு தீவிரமான அல்லது எதிர்பாராத எதிர்விளைவுகளையும் தெரிவிக்க வேண்டிய கடமை சுகாதாரப் பணியாளர்களுக்கு உள்ளது. Helsenorge.no என்னும் இணையதளம் மூலமாகவும் நீங்கள் தகவல் அளிக்கலாம்.

## நிபந்தனைக்குட்பட்ட ஒப்புதல்

இந்தக் கொரோனா வைரஸ் தடுப்பூசி பல ஆயிரம் பேர் பங்குபெற்ற பெரிய அளவிலான ஆய்வுகள் மூலம் பரிசோதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளும்,  மற்ற தடுப்பூசிகளுக்கு மேற்கொண்ட ஆய்வுகள் போன்றே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கண்காணிப்பு காலம் குறைவாக நிர்ணயிக்கப்பட்டது. எனவே, மருந்து ஒழுங்குமுறை அதிகாரிகள் இந்தத் தடுப்பூசிக்கு நிபந்தனைகுட்பட்ட ஒப்புதல் அளித்துள்ளனர். இதன் பொருள், அபாயத்துடன் ஒப்பிடும்போது, தடுப்பூசியின் நன்மை அதிகமாக உள்ளது என்பதை நிறுவ போதுமான தகவல்கள் உள்ளன. ஆனாலும் தடுப்பூசி தயாரிப்பாளர் ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்தி, தரவை ஒழுங்குமுறை அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதாகும்.

## எனக்கு எந்தத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது?

உங்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கப்பட்டதும், அது நார்வே நோய்த்தடுப்பு பதிவேட்டில், SYSVAK இல் பதிவு செய்யப்படும். உங்களுடைய இந்தத் தகவலை helsenorge.no என்னும் இணையத்தளத்தில் காணலாம்.

## நீங்கள் மேலும் தகவல்கள் அறிய விரும்புகிறீர்களா?

நீங்கள் மேலும் தகவல்கள் அறிய விரும்பினால், உங்களுடைய மருத்துவரிடம் அல்லது சுகாதாரப் பணியாளரிடம் கேளுங்கள் அல்லது நார்வே இன்ஸ்டிடியூட் ஆப் பப்ளிக் ஹெல்த்தின் fhi.no/cvp என்னும் இணையத்தளத்தைக் காணுங்கள்.